சுருக்கம்

பள்ளிக் கல்வி – பள்ளி மாணவ மாணவிகளிடம் ஒழுக்கக்கேடான முறையில் தவறாக நடந்துக் கொள்ளும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் மற்றும் தவறுகள் ஏற்படாமல் தவிர்த்தல் – ஆணைவெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (இ1) துறை**

அரசாணை (நிலை) எண். 121

நாள் : 17.5.2012:
**திருவள்ளுவராண்டு 2043**
**வைகாசி 4**
படிக்கப்பட்டவை:

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.028338/PD2/இ3/2012
நாள் 17.04.2012

*******

ஆணை :–

பள்ளி மாணாக்கர்களுக்கு முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும் செயல்பட வேண்டிய ஆசிரியர்களில் சிலர் பள்ளிகளில் பயிலும் சிறு குழந்தைகள் உட்பட மாணவ மாணவிகளிடம் ஒழுக்கக் கேடான முறையில் நடந்து கொள்வது குறித்தும், அதனால் மாணவர் சமுதாயம், குறிப்பாக பெண் குழந்தைகள் மோசமாகப் பாதிக்கப்படுவது குறித்தும் நாளிதழ்கள் மற்றும் மின்னனு ஊடகங்களிலும் சமீப காலங்களில் செய்திகள் அதிக அளவில் வெளிவருவதை பள்ளிக் கல்வி இயக்குநர் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

2) இத்தகைய அவலநிலையை உடனடியாகக் களையவும், மாணவ சமுதாயம் ஆரோக்கியமான சூழ்நிலையில் உருவாகுவதற்கும், ஆசிரியர்கள் பள்ளி மாணவ, மாணவிகளிடம் மிகுந்த அக்கறையுடனும், கடமை உணர்ச்சியுடனும் ஆசிரியர் பணி செய்யவும், பள்ளிக் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவிகளிடம் ஆசிரியர்கள் தவறான முறையில் நடந்து கொள்ளும் நிலையை முற்றிலும் தவிர்ப்பதற்கும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர்அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

3) ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை ஏற்று அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

1. தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு கடும் தண்டனையான (Major punishment) அதாவது கட்டாய ஓய்வு (Compulsory Retirement) / பணி நீக்கம் (Removal) / பணியறவு (Dismissal) போன்ற தண்டனை வழங்கப்படும். (அரசுப் பள்ளி ஆசிரியர்களைப்

பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதி 19 (2) இதற்குப் பொருந்தும். இவ்விதியை மீறுபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட தண்டனைகளுள் ஒன்று வழங்கப்பட வேண்டுமென தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 8–ல் கூறப்பட்டுள்ளது.

2. சம்பந்தப்பட்ட ஆசிரியரின் கல்விச் சான்றுகள் அனைத்தையும் ரத்து செய்ய சார்ந்த துறை மூலம் நடவடிக்கை எடுத்து கல்விச் சான்றுகளை ரத்து செய்யப்படும்.

3. பள்ளிக் குழந்தைகளும், மாணவ மாணவிகளும் பிற நபர்களின் தவறான நடவடிக்கைளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டும்.

4. ஆசிரியர்கள் தவறான செயல்களில் ஈடுபடாவண்ணம் தகுந்த உளவியல் ஆலோசகர்கள் மூலம் ஆசிரியர்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனைகள் வழங்கப்படவேண்டும்.

5. பள்ளி மாணவ மாணவிகளின் மனநிலை பாதிக்கும் பிரச்சினைகளை களைவதற்கான உளவியல் ஆலோசனைகளை வழங்குவதற்கென பள்ளிக் கல்வித் துறை மூலம் உளவியல் ஆலோசகர், உதவியாளர், மற்றும் அனைத்துவகை வசதிகளுடன் கூடிய நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தி, இதன்மூலம் மாணவ மாணவியருக்கு விழிப்புணர்வும், ஆசிரியர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்படவேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:–
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் இயக்குநர், சென்னை–6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.

நகல்:–
பள்ளிக் கல்வி துறையின் கீழுள்ள இதர துறைத் தலைவர்கள்,
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வி துறையின் அனைத்துப்பிரிவுகள், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.